ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீராஜகோபாலதாஸன் அருளிச்செய்த

# த்வயம் திவ்யம் (உகத்தின் சுகம்)

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# த்வயம் திவ்யம் (உகத்தின் சுகம்)

## தோற்றம்

ஓதுமிரண்டை இணைத்து ⋆ தன்
 பாதம் இரண்டால் அணைத்து ⋆
போதுமென மீட்டிக் கடலில் ⋆
 வாழுமென அருளினான் தம்சேவைக்கே ‖ **1** ‖

## காரணம்

ஆறும் பேறும் வேறின்றி ⋆ அவ் -
 வடியவர் அனைவரும் தமரின்றி ⋆
விண்ணும் மண்ணும் பணிசெய்ய ⋆
 பன்னும் இவ்விரண்டும் திண்ணமே ‖ **2** ‖

## சிறப்பு

திருவும் அடிகளும் திறம்பட ⋆
 எட்டும் தட்டும் விட நவின்றிட ⋆
அரங்கன் ஏவ தரத்துடன் இயம்ப ⋆
 வள்ளல் வழியில் விண்ணப்பம் இன்றே ‖ **3** ‖

## பொருள்

சேர்க்கும் திருமகள் சேர்த்தியின் மன்னுதல் ⋆
 காக்கும் குணங்கள் கருணையடிகள் ⋆
அடையும் புகல் அதிலே பற்றுதல் ⋆

sunder kidambi
prapatti dot com
sunder kidambi

இயலா நிலையில் எமக்கீன்ற பேறு ⋆
ஏற்கும் எல்லைகள் அறுக்கும் களைகள் ⋆
முன்னோர் பத்தும் மறையவர் நிதிகள் ‖ **4** ‖

ஸ்ரீ ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

திருமகள் கேட்டு அவனை கேட்பித்து ⋆
தன் அடியாரடைய தான் அடைந்து ⋆
குறைநீக்கி நிறையாக்கித் துறையென ⋆
பறை நோக்க நம்மிறையின் மறையே ‖ **5** ‖

மத்$_3$ ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

தன்னிச்சையில் தரித்து ஏவித் தான் முதல்வனாய் ⋆
உயர்ந்துறங்கி உலாவியுறைந்து உகப்பாய் ⋆
நம்மிழுக்கால் மன்னியுறையும் மாமலராள் ⋆
திருவுரத்தில் அவனைத் தினையளவும் அகலாள் ‖ **6** ‖

நாராயண ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

ஆதியாய் உடலில் உயிராய் மாசிலா சோதியாய் ⋆
பதியாய் இறையாய் கதியாய் அகலா உறவாய் ⋆
அனைத்துக் காரணமாய் காரியமாய் நாம் ஏத்தும்
ஆரணத்தில் ⋆ நாரணன் நற்குணங்கள் பூரணமே ‖ **7** ‖

சரணௌ ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

ஒன்றாய் நாலாய் பத்தாய் நின்றாய் ⋆
உள்ளாய் என்னுள் யானும் உனதாய் ⋆
எந்தாய் எங்கும் என்றும் மன்னியே ⋆
தந்தாய் இணையடிகள் எம்மிதயத்திலே ‖ **8** ‖

ஶரணம் ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழும் ⋆
தொல்வினை தீர்க்கும் என் இறையே ⋆
மன்னித்தருளும் சீமாதவன் மலரடிகள்
மருவ ⋆ மற்றொன்றின்றி நிறைவே ‖ **9** ‖

ப்ரபத்$_3$ ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

உறுமதியில் உத்தமனை உகந்தாரும் ⋆
மறுகதியின்றி மாவீரனைத் தொழுதாரும் ⋆
அரியென சக்கரத்தானை சார்ந்தாரும் ⋆
நெறி ஒன்றேயென இன்றே பற்றினரே ‖ **10** ‖

யே ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

முயலாத மூன்றில் இனம் மயங்க ⋆
இயலாத நிலையுள் மனம் ததும்ப ⋆
முத்திக்கு வழி சரண் ஒன்றேயென ⋆
தித்திக்கும் முகுந்தன் திண் கழலே ‖ **11** ‖

ஶ்ரீமதே நாராயண ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

ஒட்டாது மாசில் உயிராய் தரிக்கும் ⋆
தட்டாது கோதில கோவிந்தனளிக்கும் ⋆
தகவாது கழிந்த காலமும் தகர்க்கும் ⋆ இனி
பிரியாது கேசவன் பணியில் கிடக்கும் ‖ **12** ‖

ஆய ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

ஆவேனென அறிந்தாரும் ⋆ மாளா
அடிமை என புகுந்தாரும் ⋆ ஆவி

அரிமுகனுக்கே தந்திருந்தாரும் ⋆
    தேடி அடைவதுகத்தின் சுகமே ‖ **13** ‖

நம: ஶப்$_3$தா$_3$ர்த$_2$ம்

ஒழிந்தது யான் எனதெனக்கே ⋆
மகிழ்ந்தது மனம் அதுவும் உமக்கே ‖ **14** ‖

ப்ரபத்தி முறை

நல்வழி ஏற்று அல்வழி துறந்து ⋆
    துணிவில் நிலைத்து காவலில் வரித்து ⋆
அழியாயுறவில் புகலின்றி தாளில் ⋆
    தஞ்சம் இறைஞ்சும் எந்தன் நெஞ்சமே ‖ **15** ‖

தமிழாக்கம்

திருமகள் தனியா நாரணன்
    இணையடிகள் சரணென பற்றவே ⋆
திருமால் சேவை தமக்கின்றி
    நல்வாழ்ச்சி பெற்றனரே ‖ **16** ‖

ப$_2$லன்

பணிந்தே என் உள்ளம் உரை உடலால் ⋆
    மறைந்தே மறக்கும் பற்பிறவி மறங்கள் ⋆
தணிந்தே ஆவியகல மாயனை அத்துன்பம் ⋆
    விரைந்தே காட்டும் வைகுந்தன் வீட்டின்பம் ‖ **17** ‖

த்வயம் திவ்யம் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidambi prapatti dot com sunder kidambi